உழவர்கரை நகராட்சி
பதுச்சேரி - 5

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2025 ஜவகர் நகர், தேதி: 27/10/25

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூல் செய்வதற்கான**
**பொது ஏல அறிவிப்பு**

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட பகுதியில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிப்பவர்களிடம் நகராட்சி சார்பில் ஓராண்டு காலத்திற்கு கழிப்பிடக்கட்டணம் வசூலிப்பதற்கான உரிமம் பெற பகிரங்க **"பொது வாய்மொழி ஏலம்"** கீழ்காணும் விபரங்களின் படி நடத்தப்படவுள்ளது. மேலும் ஏலம் தொடர்பான விண்ணப்பப்படிவம் மற்றும் ஏல நிபந்தனைகள் உழவர்கரை நகராட்சி அலுவலகம் மற்றும் இனையதளமான **(www.oulmun.in) ல்** பெற்றுக்கொள்ளலாம்.

ஏலத்தேதி மற்றும் நேரம் :**14.11.2025 (வெள்ளிக்கிழமை)**மாலை 4.00 மணி
ஏலம் நடைபெறும் இடம் : உழவர்கரை நகராட்சி தலைமை அலுவலகம், ஜவகர் நகர், புதுச்சேரி.

| வரிசை எண் | கட்டணக்கழிப்பிடம் அமைவிடம் | குறைந்தபட்ச ஏலத்தொகை ஒரு வருட காலத்திற்கு | செலுத்தப்படவேண்டிய முன்வைப்பு தொகை |
|---|---|---|---|
| 1 | கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கழிப்பிடம் | ரூ.5,75,815/- | ரூ.57,582/-- |

2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை **14.11.2025 (வெள்ளிக்கிழமை)** மாலை 3.00 மணிக்குள் இந்நகராட்சியின் டெண்டர் பெட்டியில் சமர்ப்பிப்படவேண்டும்.

(ஆ.சுரேஷ்ராஜ்)
ஆணையர்

உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி - 5

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2025 ஜவகர் நகர், தேதி: 27/10/25

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூல் செய்வதற்கான பொது ஏல அறிவிப்பு**

உழவர்கரை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டபகுதியில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிப்பவர்களிடம் நகராட்சி சார்வில் ஓராண்டு காலத்திற்கு கழிப்பிடக்கட்டணம் வசூலிப்பதற்கான உரிமம் பெற பகிரங்க பொது வாய்மொழி ஏலம் கீழ்காணும் விவரங்கள் மற்றும் நிபந்தனைகளின்படி நடத்தப்படவுள்ளது.

ஏலத்தேதி மற்றும் நேரம் :14.11.2025 மாலை 4.00 மணி

ஏலம் நடைபெறும் இடம் : உழவர்கரை நகராட்சி தலைமை அலுவலகம், ஜவகர் நகர், புதுச்சேரி.

| வரிசை எண் | கட்டணக்கழிப்பிடம் அமைவிடம் | குறைந்தபட்ச ஏலத்தொகை ஒருவருட காலத்திற்கு | செலுத்தப்படவேண்டிய முன்வைப்பு தொகை |
|---|---|---|---|
| 1 | கோரிமேடு ஜிப்மர் மருத்துவமனை எதிரில் உள்ள நவீன கழிப்பிடம் | ரூ.5,75,815/- | ரூ.57,582/-- |

<u>ஏல நிபந்தனைகள்</u>:

1. ஏலம் எடுப்பவர் தனிநபராக இருத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டு சேர்ந்து ஏலம் எடுப்பது கூடாது.

2. ஏலப்படிவம் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் காசாளரிடம் ரூ.500/- மற்றும் 5% சரக்கு மற்றும் சேவை வரி (GST) செலுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது உழவர்கரை வலைத்தளமான www.oulmun.in-ல் இருந்து பதிவிறக்கம் செய்து சமர்பிக்கலாம். பதிவிறக்கம் செய்த ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் போது ரூ.500/- மற்றும் 5% GST சேர்த்து "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் வரைவோலையை (Demand draft) ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து சமர்ப்பிக்கவேண்டும்.

3. ஏலம் கேட்க விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவம் மற்றும் அதற்குண்டான முன்வைப்பு தொகையை ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி "The Commissioner, Oulgaret Municipality, Puducherry" என்ற பெயரில் ஏதேனும் ஒரு அரசுடைமையாக்கப்பட்ட வங்கியின் வரைவோலை (Demand draft) கண்டிப்பாக ஏலப்படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். முன்வைப்பு தொகை இல்லாமல் சமர்ப்பிக்கப்படும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.

4. ஏலப்படிவம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் <u>14.11.2025</u> மாலை <u>03.00</u> மணி வரையாகும், பூர்த்தி செய்யப்பட்ட ஏலப்படிவங்களை மூடி அரக்கு முத்திரை இடப்பட்ட உறையினில் "ஆணையர், உழவர்கரை நகராட்சி, புதுச்சேரி"

என்று குறிப்பிட்டு சமர்ப்பிக்க வேண்டும். உறையின் மேல் கழிப்பிடக்கட்டணம் ஏல விண்ணப்பப்படிவம் என்று குறிப்பிடவேண்டும்.

5. ஏலத்தில் பங்கேற்போர் உழவர்கரை நகராட்சியில் பெறப்பட்ட வரி பாக்கியில்லா சான்றிதழை ஏலப்படிவத்துடன் கண்டிப்பாக இணைத்தல் வேண்டும். மேற்படி சான்றிதழ் இல்லாமல் சமர்ப்பிக்கபடும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.

6. உழவர்கரை நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஏலத்தொகையைவிட அதிகமாக ஏலத்தொகை குறிப்பிடவேண்டும். குறைந்தபட்ச ஏலத்தொகையை விட குறைவாக குறிப்பிடும் ஏலப்படிவம் நிராகரிக்கப்படும்.**எவருடைய ஏலப்படிவத்தில் ஏலத்தொகை அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த தொகையிலிருந்து வாய்மொழி ஏலம் ஆரம்பிக்கப்படும்.**

7. ஏலத்தில் அதிகபட்ச ஏலத்தொகை கேட்பவர் வெற்றிப்பெற்ற ஏலதாரர் ஆவார். ஏலம் எடுத்தவர் ஏலத்தொகையை அதே நாளில் காசோலையாகவோ அல்லது ரொக்கமாகவோ செலுத்துதல் வேண்டும். தவறினால் அவர் செலுத்திய முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் இரண்டாவது அதிகபட்ச ஏலதாரருக்கு ஏலத்தொகை அனுமதிக்கப்பட்டு உரிமம் வழங்கப்படும்.

8. ஏலத்தொகையை செலுத்திய தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்கு கழிப்பிடத்கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் வழங்கப்படும்.

9. ஏலத்தில் மேற்படி இனத்திற்கு குறைந்தபட்ச கேட்புத்தொகை ரூ.1000/-ம் அதிகமாக வைத்து ஏலக்கேள்விகள் இருக்கவேண்டும்.

10. ஏலம் எடுத்தவர் கீழ்குத்தகைக்கு விடக்கூடாது மற்றும் ரசீது புத்தகத்தில் உழவர்கரை நகராட்சியால் முத்திரையிட்ட ரசீது மட்டுமே கொடுக்கவேண்டும்.

11. ஏலத்தில் வெற்றி பெற்றவர் சிறுநீர் கழிக்க நபர் ஒன்றுக்கு ரூ.5/- (ரூபாய் ஐந்து மட்டும்) மலம் கழிக்க நபர் ஒன்றுக்கு ரூ.5/- மற்றும் குளியலுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.10/- (ரூபாய் பத்து மட்டும்) மட்டுமே கட்டணமாக வசூல் செய்யவேண்டும்.

12. ஏல சம்மந்தமான இதர விபரங்கள் அறிய விரும்புவோர் புதுச்சேரி, ஜவகர் நகரில் உள்ள உழவர்கரை நகராட்சி அலுவலக வருவாய் பிரிவில் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வருவாய் அதிகாரியை சந்தித்து அறிந்துக்கொள்ளலாம்.

13. விண்ணப்பம் அளித்த நபர்கள் மட்டுமே ஏலத்தில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். வெற்றி பெறாத ஏலதாரரின் முன்வைப்பு தொகை திருப்பி தரப்படும்.

14. ஏலத்தை தள்ளி வைப்பதற்கும் அல்லது நிறுத்தி வைப்பதற்கும் நகராட்சி ஆணையருக்கு முழு அதிகாரம் உண்டு.

**(ஆ.சுரேஷ்ராஜ்)**
**ஆணையர்**

உழவர்கரை நகராட்சி
புதுச்சேரி – 5

கோ.எண்:42-46/வருவாய்/உ.ந/2025 ஜவகர் நகர், தேதி:

**கோரிமேடு கழிப்பிடக் கட்டணம் வசூலிக்க பொது வாய்மொழி ஏலம் கோருவதற்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :
2. தந்தை/கணவர் பெயர் :
3. முகவரி :

4. கைப்பேசி எண் :
5. நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஏலத்தொகை : **ரூ.5,75,815/-**
6. முன்வைப்பு தொகையின் விபரம் : **ரூ.57,582/-**

   வங்கியின் பெயர் :

   வரைவோலை எண் :

   வரைவோலை தேதி :

உரிமம் பெறுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனை விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அனைத்தையும் படித்து தெரிந்து கொண்டு அவைகளுக்கு கட்டுப்பட்டு இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கிறேன்.

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

இடம் :

தேதி :

விண்ணப்பப்படிவத்தின் விலை :ரூ.525/-(500+5%GST)

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

வரைவோலை தேதி :